


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.12.2024) சென்னையில், உடல்நலக் குறைவால் மறைவெய்திய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.

### தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் – ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.,

# ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவு!

## பல்வேறு கட்சியினரும் அஞ்சலி! இன்று இறுதி ஊர்வலம்!

சென்னை, டிச. 15 -

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏவும், மூத்த காங்கிரஸ் தலைவருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று இயற்கை எய்தினார். 50 ஆண்டுகாலத்திற்கும் மேலான அரசியல் அனுபவம் கொண்ட ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் மறைவு காங்கிரஸ் கட்சியினரை மட்டுமல்லாது, அனைத்து தரப்பினரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

பெரியாரின் பேரன் (பெரியாரின் சகோதரர் கிருஷ்ணசாமியின் பேரன்) சொல்லின் செல்வர் ஈ.வி.கே.சம்பத்தின் மகன் என்ற அடையாளங்களுடன் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன். அவருக்கு பெயர் சூட்டியதே பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். முதல் முறையாக 1984ல் சத்தியமங்கலம் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்.

காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி, தமிழக முன்னேற்ற முன்னணியைத் தொடங்கிய சிவாஜி கணேசன், அ.தி.மு.க. ஜானகி அணியுடன் கூட்டணி அமைத்து 1989 சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தார். அப்போது, தமிழக முன்னேற்ற முன்னணி வேட்பாளராக பவானிசாகர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன். 2004 லோகசப்பா தேர்தலில் கோபிசெட்டிபாளையம் மக்களவை தொகுதியில் போட்டியிட்டு எம்.பி.யாக வென்றார்.

அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் அமைச்சரவையில் பெட்ரோலியம், இயற்கை எரிவாயு துறை இணை அமைச்சராக இருந்தார்.

இதையடுத்து வணிகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர், ஜவுளித்துறை இணை அமைச்சர் உள்ளிட்ட பதவிகளை வகித்தார். மீண்டும் 2009 மக்களவைத் தேர்தலில் ஈரோடு மக்களவைத் தொகுதியிலும், 2014 மக்களவைத் தேர்தலில் திருப்பூர் தொகுதியிலும், 2019 மக்களவை தேர்தலில் தேனி தொகுதியிலும் போட்டியிட்டு தோல்வியை தழுவினார். பலமுறை மக்களவைத் தேர்தல்களில் போட்டியிட்டு, வெற்றி தோல்விகளைப் பெற்றிருந்தபோதும், சட்டமன்றத் தேர்தலில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போட்டியிடாமல் இருந்து வந்தார்.

இந்தச் சூழலில் தான் ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த தனது மகன் திருமகன் ஈவெரா கடந்த ஆண்டு அகால மரணம் அடைந்ததைத் தொடர்ந்து, இடைத்தேர்தலில் போட்டியிட்டார் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன். 38 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் எம்.எல்.ஏ.வாக போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டசபைக்குள் நுழைந்தார்.

இந்நிலையில், உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் நேற்று தமது 76வது வயதில் மறைந்துள்ளார். அவரது மறைவு காங்கிரஸ் கட்சியினர் மட்டுமல்லாது அனைத்து தரப்பினரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# பழகுவதற்கு இனிய பண்பாளர்! கொண்ட கொள்கையில் உறுதியானவர்!

## ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவுக்கு – ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இரங்கல்!

சென்னை, டிச. 15-

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. வெளியிட்ட அறிக்கையில், “ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், பழகுவதற்கு இனிய பண்பாளர்! கொண்ட கொள்கையில் உறுதியானவர்” என்று குறிப்பிட்டுள்ளார்.

வைகோ எம்.பி. விடுத்துள்ள இரங்கல் அறிக்கை வருமாறு:-

தந்தை பெரியார் அவர்களின் பெயரனும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான அன்பு சகோதரர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள் மறைவு தாங்கொணா துயரத்தைத் தருகிறது.

பெரியாரின் அண்ணன் ஈ.வி.கிருஷ்ணசாமி அவர்களின் மகனான ஈ.வெ.கி.சம்பத் அவர்களின் அருமை மகன் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்கள், பழகுவதற்கு இனிய பண்பாளர். கொண்ட கொள்கையில் உறுதியானவர்.

காங்கிரஸ் இயக்கத்தின் சுயமரியாதை தலைவர் என்று சொல்லத்தக்க அளவுக்கு காங்கிரஸ் கட்சியில் தன்னை முழுவதுமாக ஒப்படைத்துக் கொண்டு, தமிழ்நாட்டில் கட்சியை வழிநடத்துகின்ற தலைவராக உயர்ந்தவர்.

சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் திறம்பட செயலாற்றியவர்.

டாக்டர் மன்மோகன் சிங் அமைச்சரவையில் ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சர் பொறுப்பினை ஏற்று தனது ஆளுமைத் திறனை வெளிப்படுத்தியவர். தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை வலிமையோடு எடுத்துச் செல்வதற்கு எவருக்கும் அஞ்சாமல் கருத்துக்களை முன்வைத்த சிறப்பு அவருக்கு உண்டு.

தேனி நாடாளுமன்ற தொகுதியில் அவர் போட்டியிட்ட பொழுது நான் பரப்பரை மேற்கொள்ள வேண்டும் என்று பெரிதும் விரும்பி அழைத்தார்.

இளங்கோவன் அவர்களின் 70ஆவது பிறந்தநாள் விழாவில் பங்கேற்று வாழ்த்தினேன்.

கடந்த மாதம் இறுதியில் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது எப்படியும் குணமாகி மீண்டு வருவார் என்று நம்பிக்கையுடன் இருந்தேன். ஆனால் அவர் மூச்சுக்காற்று இயற்கையோடு கலந்துவிட்டது.

அன்பு சகோதரர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தகைசால் தலைவரை இழந்த காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது இரங்கல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர் – ஒன்றிய அமைச்சர் என்று பல்வேறு நிலைகளில்

# பொது வாழ்க்கைப் பணிகளை திறம்பட ஆற்றியவர்!

## காங்கிரஸ் மூத்த தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச. 15 -**

**“சட்டமன்ற, நாடாளுமன்ற, ஒன்றிய அமைச்சர் என்ற பல்வேறு நிலைகளில் பொது வாழ்க்கைப் பணிகளைத் திறம்பட ஆற்றியவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்கள்” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ் .இளங்கோவன் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் மறைவால் மிகுந்த வேதனை அடைகிறேன்.

### தன் கவலைகளை மீறி மக்கள் பணியாற்றியவர்!

தந்தை பெரியார், சொல்லின் செல்வர் ஈ.வி.கே. சம்பத் அவர்கள் என மிகப்பெரும் அரசியல் பாரம்பரியமிக்க குடும்பத்தைச் சேர்ந்த நண்பர் இளங்கோவன் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர், சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய அமைச்சர் என்று பல்வேறு நிலைகளில் பொதுவாழ்க்கைப் பணிகளைத் திறம்பட ஆற்றியவர். எப்போதும் தன் மனதில் பட்டதைப் பேசிவிடக் கூடிய பண்புக்குச் சொந்தக்காரர்.

அவரது அன்பு மகனும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான திருமகன் ஈ.வெ.ரா. அவர்களை இழந்ததில் இருந்தே நண்பர் இளங்கோவன் அவர்கள் மனதளவில் மிகவும் உடைந்து போயிருந்தார். எனினும், இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்று, தன் கவலைகளை மீறி மக்கள் பணியாற்றி வந்தார்.

என்னை எப்போது சந்திக்க வந்தாலும், “உடம்ப பாத்துக் கோங்க” என்று அவர் அக்கறையுடன் சொல்லத் தவறியதே இல்லை. அவ்வாறு அவர் அன்பொழுகச் சொல்லும்போதெல்லாம் “நீங்க உங்க உடம்ப பாத்துக்கோங்க” என நானும் அவரிடம் சொல்வேன். அதற்கு அவர், “நீங்கள் என்னிடம் ஒப்படைத்த மக்கள் பணியை ஏற்ற பிறகு இன்னும் சுறுசுறுப்புடன் பணியாற்றுகிறேன். நிறைய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறேன். நலமாக இருக்கிறேன்” என்று உற்சாகம் ததும்பக் கூறி என்னைச் சமாதானப்படுத்துவார்.

சட்டமன்றத்தில் சந்திக்கும்போதும், நமது திராவிட மாடல் அரசின் திட்டங்களைக் குறிப்பிட்டு அவற்றுக்கு மக்களிடையே உள்ள ஆதரவையும் என்னிடம் தெரிவித்துப் பாராட்டுவார்.

அவர் உடல்நலம் குன்றி மருத்துவமனைக்குப் போகும் நிலையிலும் தனது துணைவியாரிடம், என்னைச் சந்திக்க வேண்டும் என்ற விருப்பத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தார். அதை அறிந்து அவரை நான் சந்தித்தபோது, அவர் பேசும் நிலையில் இல்லை. இருந்தபோதும் அவர் என்னிடம் என்ன சொல்ல நினைத்தார் என்பதை உணர்ந்தவனாகவே நான் இருந்தேன்.

### தனிப்பட்ட முறையில் மிகவும் வேதனை!

அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாள் முதல், அவரது மகனையும், மருத்துவர்களையும் தொடர்புகொண்டு, அவரது உடல்நலன் குறித்த தகவல்களை அவ்வப்போது அறிந்து வந்தேன். இந்நிலையில், இன்று காலை அவரது உடல்நலனில் பின்னடைவு ஏற்பட்ட செய்தியும் அதனைத் தொடர்ந்து அவர் மறைவுற்றார் என்ற செய்தியும் வந்தடைந்தது.

அவரது மறைவு அரசியல்ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் மிகவும் வேதனையை ஏற்படுத்துகிறது.

பல ஆண்டுகள் தமிழ்நாடு அரசியலில் முன்னணித் தலைவராக விளங்கி, நீண்டகாலம் மக்கள் பணியாற்றிய அவரது இழப்பால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், காங்கிரஸ் பேரியக்கத்தின் தோழர்களுக்கும், ஈரோடு கிழக்கு தொகுதி மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



கடலூர் கிழக்கு மாவட்டம், குமராட்சி கிழக்கு ஒன்றியம் சிவாயம் ஊராட்சி. கிளைக் கழக அவைத் தலைவர், கழக மூத்த முன்னோடி கனக செல்வராஜ் மறைவையொட்டி, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று (14.12.2024) அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். உடன் கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா, காட்டுமன்னார்கோயில் மேற்கு ஒன்றிய செயலாளர் முத்துசாமி, பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் முத்து பெருமாள், குமராட்சி ஒன்றிய செயலாளர்கள் கிழக்கு சங்கர், மத்திய ராஜேந்திர குமார், வடக்கு சோழன், தெற்கு கோவிந்தசாமி, பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் கலையரசன், புவனகிரி கிழக்கு ஒன்றிய செயலாளர் மனோகர், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், ஜேம்ஸ் விஜயராகவன், வெற்றிவேல், பேரூராட்சி தலைவர்கள் காட்டுமன்னா கணேச மூர்த்தி, அண்ணாமலை நகர் பழனி, லால்பேட்டை பேரூர்செயலாளர் பழனி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கார்திகேயன், மாவட்ட ஆதி திராவிட நல அணி அமைப்பாளர் பரந்தாமன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளைக் கழகம் சார்பு அணி நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினார்கள்.

### துணை முதல்வர் பிறந்தநாள்: க.சிட்டிபாபு தலைமை! எம்.கே.வினோத் வேலாயுதம் – வி.கௌதமன் முன்னிலை! ஆயிரம் விளக்கு மேற்கு

# 109வது வட்டத்தில் பொதுக்கூட்டம்: சிவாஜி கிருஷ்ணமூர்த்தி - டெக்சின் ரொமேரியோ சிறப்புரை!

## நே.சிற்றரசு – தயாநிதி மாறன் எம்.பி. – அன்பகம் கலை – டாக்டர் எழிலன் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்கல்!

சென்னை, டிச.15-

சென்னை மேற்கு மாவட்டம் - ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி - 109வது வட்ட தி.மு.க. சார்பில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழகப் பொதுக்கூட்டமும், நல உதவிகள் வழங்கிடலும் நடைபெறுகிறது.

நாளை (16.12.2024 - திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில், சூளைமேடு, பெருமாள் கோவில் அருகில், திருவேங்கடபுரம் 2வது தெருவில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு - 109வது வட்டச் செயலாளர் க.சிட்டிபாபு தலைமை வகிக்கிறார்.

ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிச் செயலாளர் எம்.கே.வினோத் வேலாயுதம், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் வி.கௌதமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.ஜோஸ்டேனியல், சுமதி சிட்டிபாபு, அ.குப்பன், கே.தட்சிணாமூர்த்தி, என்.ஈ.சரவணன், ஏ.வெங்கடேசன், ச.ராசுகுமார், சு. சண்முகம், ப.ஜெயராணி, ஜி.இளங்கோ, ஜி.ஆர். மூர்த்தி, ஏ.ஆரோக்கிய தாஸ், எம்.அண்ணாமலை, எம்.தியாகராஜன், எம். முனிரத்தினம் உள்பட பலரும் வரவேற்றுப் பேசுகின்றனர்.

தலைமைக் கழகப் பேச்சாளர்கள் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, டெக்சின் ரொமேரியோ ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர் ஏராளமானோருக்கு நல உதவிகள் வழங்குகின்றனர்.

எம்.டி.ஆர்.நாதன், வி.எஸ்.ராஜ், து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, புவி.பாலாஜி, ஸ்டெர்லிங் மோகன் என்.பி.இதாயத்பாஷா, பா.கமலகண்ணன், ஆர்.பொன்னம்மாள்,

வரதை த.பரி, த.குணசேகரன், டேவிட் இன்பராஜ், கே.எஸ்.தினேஷ்பிரபு, மு.மோகன், ப.பிரகாஷ், துபாய் வி.ஆர்.விஜய், பி.கே.லதா பிளாரன்ஸ், ச.அசோக் குமார், டி.எஸ்.ராஜா, மு.செந்தில்குமார், மு.சீனிவாசன், எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன், ஜி.வி.சரவணன், என்.மோகனவேல், க.தங்கமணி, ஆரோன்பெலிக்ஸ்,

ப.சுரேஷ், எம்.டி.ஆர். புகழ், பார்த்திபன், வி.என். பாபு, டி.ஐசனட், ஆர்.சீனிவாசன், இரா.முத்துகுமார், ஆ.விஜயகுமார், ஜி.கே. ராஜா, எஸ்.மாலா, எல். வாஞ்சிநாதன்,

பி.கோவிந்த ராஜன், ஆர்.நீலகண்டன், ஆர். சேகர், சு.நைனியப்பன், என்.எஸ்.சுப்பிரமணியன் உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

பாஷாகுமார் நன்றி கூறுகிறார்.